மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்குச்செலவு அதிகமாக ஆகிறது என்ற ஒரு காரணத்தாலும், இதுவரையில் தொழிற் பயிற்சி பெற்ற 32,325 பேர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்று வேலை வாய்ப்பு அகங்களின் புள்ளி விவரங்கள் சொல்கின்ற காரணத்தாலும், புதிதாகத் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கும் எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை.

கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள பாலங்கள்.

*வினா எண் 11—திரு. சென்னை மு. அரங்கநாதன் மாண்புமிகுஉள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவல்லிக்கேணித் தொகுதியில் லாயிட்ஸ் சாலையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே உள்ள பாலத்தையும் லேடி வெலிங்டன் உயர்நிலைப் பள்ளிக்குக் குறுக்கே உள்ள பாலத்தையும் அகலப் படுத்த உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்தது லாயிட்ஸ் சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே என்ற வார்த்தை. ஆனால் இதிலே கூவத்தின் குறுக்கே என்று தவறாகப் போட்டிருக்கிறார்கள். லாயிட்ஸ் காலனியின் குறுக்கே கூவமே போவதில்லை.

இரண்டாவதாக, அந்தக் கெனாலுக்குக் குறுக்கே இருக்கிற லேடி வெலிங்டன் கல்லூரிக்கும், ஆரம்ப உயர்நிலைப் பள்ளிக்கும் இடையிலே இருக்கின்ற பாலம் போக்குவரத்திற்கு மிகவும் இடை யூறாக இருக்கிறது. 24, 12, போன்ற பஸ்கள் நிற்கும் நிலையம் அங்கே இருக்கிறது. அது மிகவும் நெரிசலான இடம். இதுபற்றி போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களிடத்தில் கூட மகஜ ராகக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: கேள்வியாகத்தான் கேட்கிறேன். அதுவும் போக்குவரத்திற்கு நெரிசலான இடம். இதையும் கொடுத்திருக்கிறேன். அதைப்போல சீரணிக்கு

1979 அக்டோபர் 27]

எதிரில் உள்ள குப்பத்தை இணைக்கும் மரப்பாலம் பற்றியும் கொடுத்திருக்கிறேன். இந்த மூன்றையும் உடனடியாக எடுத்துக் கொண்டால் அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் இருக்கும். அந்தத் திட்டதை இந்த ஆண்டா வது செய்வதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. அரங்கநாதன அவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல் கிறேன். நான் தாங்கள் கேட்ட கேள்வியை எடுத்து வரச் சொன்னேன். "திருவல்லிக்கேணி தொகுதி லாயிட்ஸ் சாலையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே உள்ள" என்றுதான் கொடுத் திருக்கிறீர்கள். அவ்வாறு எழுதியது தங்கள் தவறுதானே தவிர, அச்சடிக்கப்பட்டதில் தவறு இல்லை. எனவே, எப்பொழுதும் நகலை வைத்துக்கொண்டு பேசுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நான் எழுதிய நகல் என்னிடத்தில் இருக்கிறது. அதைக் கொண்டு வந்து தருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இரண்டு பாலத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

இராமேஸ்வரம் நகரியம்.

*வினா எண் 12— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக மாற்று வது பற்றி அனைத்துக் கட்சியினரும் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர்களா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவ ரவர்களே, அந்தப் பரிசீலனை சிக்கிரமாக முடிக்கப்பட்டு, நகர சபையாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பரிசீலனை முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.